7th November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes Sir

(b) The Madras Agro-Industries Corporation has been formed as a wholly owned Government Company (Private Limited) with an authorised Capital of Rs. 2 crores. Initially the State Government are investing a sum of Rs. 25 lakhs in the Share Capital of the Company and the Central Government are also expected to contribute a similar sum. The object of the Company is to promote, set up and administer industries which will improve and modernise agriculture, pisiculture, animal husbandry, poultry keeping, etc. It will also promote and set up industries for processing of agricultural produce.

திரு. மீ. கலியாணசுந்தரம் : என்ன வகைகளில் ஆரம்பத்தில் தொழில்களை எடுத்துக்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறோம். இதற்கு இன்னும் மூலதனம் மத்திய சர்க்காரில் இருந்து வரவில்லை. அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் முதன்மையாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நினைப்பது அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் தான்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஜப்பான் தேசத்தின் உதவியைக் கொண்டு நமது தமிழ்நாட்டில் அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் ஆரம்பிக்கும் திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ஜப்பான் கருவிகளை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளைத் தான் செய்துகொண்டிருக்கிறார்கள்.

Chemicals

* 471 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up factories for the manufacture of potassium chloride, potassium chlorate and magnesium chloride respectively in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Messrs. Wimco Limited, Bombay and Messrs. Mettur Chemicals and Industrial Corporation Limited, Mettur Dam, propose to set up industrial undertakings in the State to produce potassium chloride magnesium compounds and bromides.

A licence has been granted to Messrs. Santha Chemicals, Madras, to set up a unit to Manufacture potassium chlorate at Ambasamudram. It is also proposed to set up an industrial cooperative at Sivakasi to manufacture potassium chlorate.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எம். எஸ். செல்வராஜன் : இவைகளுக்கு லைசென்சு வழங்கிய காலம் எப்போது? வெகு காலத்திற்கு முன்பே லைசென்சு வழங்கப்பட்டும் தொழிலை ஆரம்பிக்க இவ்வளவு கால தாமதம் எதனால் ஏற்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாந்தா கெமிகல்ஸ் என்ற ஒன்றே ஒன்றுக்குத்தான் நீண்டகாலத்திற்கு முன்பே லைசென்சு வழங்கப்பட்டது. பல்வேறு கஷ்டங்கள், நிதி வசதிக் குறைவு ஆகிய காரணத்தினால்தான் சீக்கிரம் அவர்களால் ஆரம்பிக்க முடியவில்லை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன்

* 472 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் 31—3—1966 வரை வேலை செய்து வந்து, தற்பொழுது வேலையில்லை என நீக்கப்பட்ட அதிகப்படியான சிவில் இன்ஜினீயர்களை ராஜ்ய சர்க்கார் பணிகளின் கீழ் எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன் வேலை நீக்கம் செய்துள்ள உபரி இளநிலைப் பொறியாளர்களில் சிலரை மாநிலப்பொறியியல் பணியில் எடுத்துக்கொள்வது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்தது. மாநிலப் பொறியியல் பணியில் நியமனம் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பெற தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகத்துக்கு விண்ணப்பித்துக்கொள்ள, வேலை நீக்கம் செய்யப்பட்ட அப்பொறியாளர்களுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அரசாங்கப் பணிக்காக நிச்சயிக்கப்பட்ட வயதைவிட அவர்கள் வயது அதிகமாயிருந்தாலும் அவர்கள் மேற்சொன்னவாறு விண்ணப்பித்துக் கொள்ளலாம். தகுதியுள்ள நபர்கள் விஷயத்தில் வயது குறித்த விதிகள் தளர்த்தப்படும். வேலையிலிருந்து நீக்கப்பட்ட மூன்று பொறியாளர்கள் தொழில் துறையில் கட்டிடப்பிரிவில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற சலுகை போன்று, மற்ற கட்டுமான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டிருக்கிறவர்களிடையே வேலை நீக்கம் வரும்போது அளிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான கோரிக்கை, மனுக்கள் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. டி. சார்ச்சா கவுடர் : நெய்வேலியிலே ஏறக்குறைய 350-க்கு மேற்பட்ட இன்சினியர்கள் வேலை இழந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாக, தமிழ் நாடு பூராவும் எஞ்சினியர்கள்